**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 37/2023**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 04–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 04.09.2025 | தகப்பனார் பெயர்: | சுந்தரம் |
| பெயர்: | பாலகுமாரன் (PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | சீர்காழி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 69/2025 |

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 04.09.2025</u>**

**(ஆரம்பித்த நேரம்– 13.06)**

1. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் ஞாபகமில்லை. தாவா சொத்தில்தான் அ/மி ஸ்ரீ ருத்ர மகா காளியம்மன் கோயில் உள்ளது என்றால் சரிதான். எங்களது சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கம். சங்கம் சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய யார் அனுமதி கொடுத்தார்கள் என்றால் சங்க உறுப்பினர்கள் கொடுத்தார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்றால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. தாவா கோயிலில் எங்களது சங்கத்திற்கு எவ்வித உரிமையும் அனுமதியும் இல்லை என்றால் சரியல்ல, தங்கராஜ் என்பவர் என்னிடம் கோயிலின் சாவியை கடந்த 2022ம் வருடம் கொடுத்தார். தாவா கோவிலுக்கு தங்கராஜ் என்பவர் பரம்பரை அரங்காவலர் என்றால் இல்லை, அவர் பராமரிப்பாளர் மட்டுமே. மேற்படி தங்கராஜின் மகன் தான் இந்த பிரதிவாதி நடராஜன் என்றால் சரிதான். தங்கராஜின் மனைவி பெயர் சட்டமுத்து என்றால் சரிதான்.

சட்டமுத்துவின் தந்தை பெயர் ராமு பிள்ளை (எ) ராமநாதன் என்றால் சரிதான். தாவா கோயிலானது கடந்த 1943ம் வருடம்ட ராமு பிள்ளை (எ) ராமநாதன் என்பவரால் கட்டப்பட்டு அவர்தான் பரம்பரை அறங்காவலர் என்ற முறையில் பராமரித்து வந்தார் என்றால் இல்லை, சபாநாயக முதலியார் வகையறாவைச் சேர்ந்த சுந்தரத்தன்னி என்பவரால் கட்டப்பட்டது.

3. தாவா கோயிலை சுந்தரத்தன்னி கட்டினார் என்பது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சுந்தரத்தன்னி என்பவர் கோயிலை கட்டியதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, வாய்மொழியாக கேட்கப்பட்டது தான். தாவா கோயிலை வாய்க்காங்கரை தெருவைச் சேர்ந்தவர்கள் பராமரித்து வந்தார்கள் என்று நான் வழக்குரையில் கூறியுள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. அதேபோல நாடிமுத்து, ஜெயபால் ஆகியோர் கோயிலை இடித்துவிட்டு புதிதாக கட்டினார்கள் என நான் வழக்குரையில் கூறியுள்ளது சரியல்ல என்றால் சரியல்ல. அதேபோல வாய்க்காங்கரை தெருவைச் சேர்ந்தவர்கள் தான் கோயிலை கும்பாபிஷேகம் செய்து ஆலயத்தின் முகப்பில் கல்வெட்டு வைத்துள்ளார்கள் என்று நான் கூறியது தவறு என்றால் சரியல்ல.

4. கடந்த 1943 முதல் தாவா கோயிலை ராமுபிள்ளை (எ) ராமநாதன் தான் அவர் இறக்கும் வரையில் அறங்காவலர் என்ற முறையில் கோயிலை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. ராமுபிள்ளை (எ) ராமநாதன் இறப்பிற்கு பின்னர் தாவா கோயிலை ராமநாதனின் மருமகன் தங்கராஜ் என்பவர் அறங்காவலர் என்ற முறையில் பராமரித்து வந்தார் என்றால், வாய்க்காங்கரை தெருவாசிகள் தான் தங்கராஜ் என்பவரிடம் தாவா கோயிலின் அனுபவத்தை கொடுத்தனர், அதன்பிறகு நான் தாவா கோயிலின் சாவியை பெற்று கொண்டேன். தங்கராஜ் என்பவர் தாவா கோயிலை நிர்வகித்து வந்தார் என்றால் சரிதான். கோயிலின் பெயரில் தங்கராஜ் பான் கார்டு பெற்றுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. தாவா கோயிலின் பெயரில் தங்கராஜ் மற்றும் பிரதிவாதி நடராஜன் பெயரிலும் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி சீர்காழி கிளையில் வங்கி கணக்கு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா கோயிலின் மின் இணைப்பு தங்கராஜ் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தங்கராஜ் இறக்கும் வரையில் மின் கட்டணத்தை அவர்தான் செலுத்தி வந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு பிரதிவாதி நடராஜன் தான் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் மின் கட்டணத்திற்கான பணம் எங்களால் கொடுக்கப்பட்டது.

6. மின் கட்டணத்திற்கான பணம் எங்களால் கொடுக்கப்பட்டது என்று நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அ/மி ஸ்ரீ ருத்ர மகாகாளியம்மன் கோயிலுக்கு பரம்பரை டிரஸ்ட் என்ற பெயரில் டிரஸ்டை தங்கராஜ், தங்கராஜின் மகன்கள் நடராஜன், கோபு ஆகியோர்கள் 08.02.2019ல் டிரஸ்டு ஆவணம் எழுதி அதனை சீர்காழி சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, வழக்கிற்கு பிறகுதான் மேற்கண்ட விபரம் தெரியும். தங்கராஜ் கடந்த 26.11.2023ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். தங்கராஜ் இறந்தபிறகு பிரதிவாதி நடராஜன்தான் பரம்பரை அறங்காவலராக தாவா கோயிலை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.32)**